






# SINGLE TEACHER SCHOOLS

Unit of Swami Vivekananda Rural Development Society - Established -1979


## NEWS LETTER

Founder : **Brahmalin Dayananda Saraswathi**





**Shri. S. Vedantamji**
Chairman



**Shri. K.N. Krishnamurthyji**
Vice Chairman



**Dr. Shri. R. Krishnanji**
President



**Smt. Kamala Krishnamachariji**
Vice President



**Shri. S. Subramaniamji**
Hon. Secretary



**Shri. G. Krishnaswamyji**
Hon. Treasurer



**VOLUME 49** | **For Private Circulation** | **JULY 2026**


### INDEX


| | |
|---|---|
| Honouring Acharyas and Satsangh Programme | - Page No 1 to 3 |
| Distribution of Nutrition Health Mix to STS Students | - Page No 4 |
| Chutti Madal | - Page No 5 to 6 |
| Handing Over of TCBs | - Page No 7 to 8 |
| Dedication of Desilted Ponds | - Page No 8 |
| Cancer Awareness & Detection Camp | - Page No 9 |
| Free Eye Check-up Camps | - Page No 9 to 10 |
| Free Cervical Cancer Vaccination | - Page No 10 |
| Cervical Cancer Vaccination - A milestone achievement | - Page No 11 to 12 |
| Free Master Health Check-Up | - Page No 12 |
| Success Stories | - Page No 13 to 14 |
| Car Driving | - Page No 15 |
| Welcoming a New Donor - Shri. Aravid Subramaniam | - Page No 15 to 16 |


## HONOURING ACHARYAS and ANNUAL SATSANGH 2026



As a motivational measure, we have started conducting a three-day Satsangh Camp for our Acharyas from last year and in continuation, this year, we have conducted the camp for Acharyas from different villages at our Skill Training Centre, Ulundai.

On the Day-1, we presented the Best Acharya Award (Shield, Certificate & Cash Award) for the year 2025/2026 with Stars and Cash Rewards to Acharyas who have been working with STS for more than 5, 10 and 15 years. In total, 190 Acharyas have been honoured.

On the Day-2 and Day-3, many participative, interesting and knowledge oriented programmes were conducted as part of Annual Satsangh program.



**Day 1 - 17.05.2026**

SVRDS President Dr. Shri. R. Krishnanji addressed the gathering with a welcome speech and explained the background of the function after which our Vice-Chairman Shri. K.N. Krishnamurthyji gave a speech.

Madam Smt. Shanthi Vaidyanathanji of ARSR Foundation Inc., USA, who has been associated with us for longer time and currently supporting **68 Schools** addressed the gathering after which speech by Shri. J.S. Shivakumarji. Head - Operations followed by Vote of thanks by our Board Member Shri. Muniyandiji.

In the afternoon, 63 Acharyas and 9 Field Supervisors were taken to Thiruvalangadu Temple, where they had good Dharshan and after return, they performed **"Vilakku Pooja"** at our Skill Training Centre.

**Day 2 - 18.05.2026**



In the morning, Acharyas participated in the Yoga Training by Acharya Mrs. Rama Devi.

This was followed by a session on Soft Skill Development by the Trainer Mr. K. Shanmugasundaramji, VIS Academy, who are the associate partners for training.

In the afternoon, Acharyas were taken to the Egmore Government Museum after which, a visit to Ashtalakshmi and Arupadai Temples was organised and finally spent good time at Besant Nagar Beach.

**Day 3 - 19.05.2026**

The morning session started with the training on Origami, which was conducted by Major Om Prakash. He requested all Acharyas to train their students, the art of Origami at least twice a week by spending 10-15 minutes.

This was followed by speech by Swami Shri. Yathunanandaji of RK Mission, T. Nagar. He highlighted the roles and responsibilities of Acharyas, how women need to shape up their life through self-confidence and the leadership aspect they should take and teach the children with passion.

**President Session**

In the afternoon, a detailed presentation about our organisation and the various projects being carried out, the structure of the organisation and future plans were shared to the Acharyas by the undersigned. Acharyas shared their feedback about the programme.

The undersigned explained regarding focus on dharma which is the foundation of SVRDS and how all of us should adhere to Dharma.

Finally, Acharyas expressed their thanks to STS that they have not only learnt many things but also encouraged the Team Spirit.

They were given momentous and snacks.

## ஆச்சார்யார்களுக்கான சிறப்பு பயிற்சி முகாம்



ஆச்சார்யார்களுக்கு கௌரவம் மற்றும் ஆண்டு சத்சங்கம் – 2026 எங்கள் ஓராசிரியர் பள்ளிகள் (STS) ஆச்சார்யார்களை ஊக்குவிக்கும் நோக்கில், கடந்த ஆண்டு முதல் மூன்று நாள் சத்சங்க முகாமை நடத்தி வருகிறோம். அதன் தொடர்ச்சியாக, இந்த ஆண்டும் பல்வேறு கிராமங்களில் பணியாற்றும் ஆச்சார்யார்களுக்காக உளுந்தையில் உள்ள ஸ்ரீ ஆர். பி. கிருஷ்ணமாச்சாரி திறன் பயிற்சி மையத்தில் இந்த முகாம் சிறப்பாக நடைபெற்றது.

முதல் நாள், 2025/2026ஆம் ஆண்டிற்கான சிறந்த ஆசிரியர் விருது (கேடயம், சான்றிதழ் மற்றும் ரொக்கப் பரிசு) வழங்கப்பட்டது. மேலும், 5, 10 மற்றும் 15 ஆண்டுகளுக்கும் மேலாக ஓராசிரியர் பள்ளிகளில் சிறப்பாகப் பணியாற்றி வரும் ஆச்சார்யார்களுக்கு நட்சத்திர விருதுகளும் ரொக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டன. மொத்தம் 190 ஆச்சார்யார்கள் இவ்விழாவில் கௌரவிக்கப்பட்டனர்.

இரண்டாம் மற்றும் மூன்றாம் நாட்களில், ஆண்டு சத்சங்கத்தின் ஒரு பகுதியாக, ஆச்சார்யார்களின் அறிவு, திறன் மற்றும் பங்கேற்பை மேம்படுத்தும் வகையில் பல பயனுள்ள, சுவாரஸ்யமான நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

**முதல் நாள் – 17.05.2026**



SVRDS தலைவர் டாக்டர் ஸ்ரீ ஆர். கிருஷ்ணன்ஜி அவர்களால். நிகழ்ச்சிக்கு வரவேற்புரை வழங்கி, நிகழ்ச்சியின் நோக்கத்தை விளக்கினார். தொடர்ந்து நமது Vice-Chairman திரு. கே. என். கிருஷ்ணமூர்த்திஜி சிறப்புரையாற்றினார்.

நீண்ட காலமாக எங்களுடன் இணைந்து செயல்பட்டு, தற்போது 68 ஓராசிரியர் பள்ளிகளுக்கு ஆதரவு வழங்கி வரும் அமெரிக்காவின் ARSR Foundation Inc. அமைப்பைச் சேர்ந்த திருமதி சாந்தி வைத்தியநாதன்ஜி அவர்கள் சிறப்புரையாற்றினார். அதனைத் தொடர்ந்து திரு. ஜே. எஸ். சிவகுமார்ஜி, செயல்பாட்டு தலைவர் (Head-Operations) உரையாற்றினார். இறுதியாக, நமது நிர்வாகக் குழு உறுப்பினர் திரு. முனியாண்டிஜி நன்றியுரை வழங்கினார்.

பிற்பகலில், 63 ஆச்சார்யார்களும் 9 கள மேற்பார்வையாளர்களும், திருவாலங்காடு கோவிலுக்கு தரிசனத்திற்காக அழைத்துச் செல்லப்பட்டனர். பின்னர் திறன் பயிற்சி மையத்திற்கு திரும்பிய அவர்கள் அனைவரும் விளக்கு பூஜையில் கலந்து கொண்டனர்.



**இரண்டாம் நாள் – 18.05.2026**

காலையில், திருமதி ரமா தேவிஜி அவர்கள் தலைமையில் ஆச்சார்யார்களுக்கு யோகா பயிற்சி அளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, எங்கள் பயிற்சி இணை அமைப்பான VIS Academy–யின் பயிற்சியாளர் திரு. கே. சண்முகசுந்தரம்ஜி அவர்கள் மென்மைத் திறன் (Soft Skills) மேம்பாடு குறித்த பயிற்சியை வழங்கினார்.

பிற்பகலில், ஆச்சார்யார்கள் சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பின்னர் அஷ்டலட்சுமி கோவில், அறுபடை வீடு கோவில் ஆகியவற்றில் தரிசனம் செய்ததுடன், பெசன்ட் நகர் கடற்கரையில் மகிழ்ச்சியான நேரத்தையும் செலவிட்டனர்.

**மூன்றாம் நாள் – 19.05.2026**

காலையில், மேஜர் ஓம் பிரகாஷ்ஜி அவர்கள் ஓரிகாமி (Origami) பயிற்சியை நடத்தினார். ஒவ்வொரு ஆச்சார்யார்யாவும் வாரத்திற்கு குறைந்தது இரண்டு முறை, 10 முதல் 15 நிமிடங்கள் ஒதுக்கி, தங்கள் மாணவர்களுக்கு ஓரிகாமி கலையை கற்றுத்தருமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, இராமகிருஷ்ண மடம், தி. நகர், சுவாமி ஸ்ரீ யதுநானந்த ஜி அவர்கள் சிறப்புரையாற்றினார். ஆசிரியர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள், பெண்கள் தன்னம்பிக்கையுடன் தங்கள் வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ள வேண்டிய அவசியம், தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொண்டு, மாணவர்களுக்கு அர்ப்பணிப்புடன் கல்வி அளிக்க வேண்டிய முக்கியத்துவம் ஆகியவற்றை அவர் வலியுறுத்தினார்.

**தலைவர் அமர்வு**

பிற்பகலில், நமது அமைப்பின் வரலாறு, பல்வேறு சமூகத் திட்டங்கள், நிர்வாக அமைப்பு மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து ஆச்சார்யார்களுக்கு விரிவாக விளக்கினார். ஆச்சார்யார்களும் இம்முகாம் குறித்து தங்களது கருத்துகள் மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

மேலும், SVRDS அமைப்பின் அடித்தளமாகத் திகழும் “தர்மம்” குறித்து விளக்கி, நாம் அனைவரும் தர்ம நெறிகளைப் பின்பற்றி செயல்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார். இறுதியாக, இம்முகாமின் மூலம் பல புதிய விஷயங்களைக் கற்றதோடு, குழு ஒற்றுமை (Team Spirit) வளர்ந்ததாக ஆசிரியர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

அனைவருக்கும் நினைவுப் பரிசுகளும் சிற்றுண்டியும் வழங்கப்பட்டு, மூன்று நாள் ஆண்டு சத்சங்க முகாம் இனிதே நிறைவுற்றது.

# DISTRIBUTION OF NUTRITION HEALTH MIX TO STS STUDENTS




We are extremely grateful to **TVS Group of Companies,** namely, Turbo Energy Limited, Real Talent Engineering Pvt. Ltd., and Abhi Showatech (India) Pvt. Ltd., for their generous support towards the health and well-being of the children studying in Single Teacher Schools. (STS) by distributing Nutrition Health Mix. They have been distributing health food mix for the last 3 Years starting with 7 Schools wherein 200 children are getting benefitted.

Children come to STS after spending the whole day at their respective schools and nourishing them would surely motivate them and be energetic.



Based on our constant requests, now they are planing to expand this support to 1000 Children to 29 STS Schools out of which on Monday, the 13th April 2026, they have distributed Nutrition Health Mix to 270 Students (from 10 Schools) for one month.

Shri. S. Duraiswamyji, Executive Director has presided over the programme and distributed Nutrition Health Mix to the children.

Such initiatives play a vital role in strengthening of the foundation for a healthier and brighter future.

# STS குழந்தைகளுக்கு ஆரோக்கிய சத்துணவு கலவை வழங்குதல்



STS பள்ளிகளில் பயிலும் குழந்தைகளின் உடல்நலன் மற்றும் நல்வாழ்விற்காக தாராளமான நிதியுதவி வழங்கிய **TVS குழும நிறுவனங்களான** Turbo Energy Limited, Real Talent Engineering Pvt. Ltd., மற்றும் Abhi Showatech (India) Pvt. Ltd., ஆகிய நிறுவனங்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். கடந்த 3 ஆண்டுகளாக இந்நிறுவனம் 7 பள்ளிகளில் இருந்து இந்த திட்டத்தைத் தொடங்கி, தற்போது 200 குழந்தைகள் இதன் மூலம் பயன் பெற்று வருகின்றனர்.

குழந்தைகள் தங்களது வழக்கமான பள்ளி நேரத்தை முடித்துவிட்டு மாலை நேரத்தில் STS பள்ளிகளுக்கு வருவதால், அவர்களுக்கு சத்துணவு வழங்குவது அவர்களை ஊக்கப்படுத்துவதோடு, புத்துணர்ச்சியுடனும் உற்சாகத்துடனும் இருக்க உதவுகிறது.



எங்களின் தொடர்ச்சியான வேண்டுகோளின் அடிப்படையில், தற்போது இந்த உதவித் திட்டம் 29 STS பள்ளிகளில் பயிலும் 1000 குழந்தைகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அதன்படி, 13 ஏப்ரல் 2026 திங்கட்கிழமை அன்று 10 பள்ளிகளில் இருந்து வந்த 270 மாணவர்களுக்கு ஒரு மாதத்திற்கான ஆரோக்கிய சத்துணவு கலவை வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்கு நிர்வாக இயக்குநர் திரு. எஸ். துரைசாமிஜி அவர்கள் தலைமை தாங்கி, குழந்தைகளுக்கு ஆரோக்கிய சத்துணவு கலவையை வழங்கினார்.

இத்தகைய முயற்சிகள், ஆரோக்கியமான மற்றும் ஒளிமயமான எதிர்காலத்திற்கான வலுவான அடித்தளத்தை அமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.


# சுட்டி மடல் CHUTTI MADAL



T. Harish, Vembakkam




A . Rakshaya, Agoor



V. Kowshik Abimanyu, Uthiramerur




T. Harish, Vembakkam




S. Nithish, Maduramangalam




R. Thirukumaran, Thiruvannamalai




V. Kayalvizhi, Chellathur





R. Asbiathul Rahela, Vembakkam




S. Yashree, Chellathur



S. Vaishnavi, Chellathur




P.B. Vanitha, Chellathur




N. Cheran, Vallimalai




S. Hemanth, Chellathur




V. Gaurau, Miligaikuppam



M. Riya Shree, Vallimalai




Gurusharan, Agoor

# HANDING OVER OF CONSTRUCTED TOILET CUM BATHROOMS TO THE BENEFICIARIES



Under the **Swachh Bharat** Mission of our **Prime Minister of India**, **Shri. Narendra Modiji** the project of constructing individual Toilet cum Bathrooms free for poor and needy families with more females in villages through Single Teacher Schools was launched in October 2, 2014.

During the month of April to June 2026, we have constructed and handed over **272 Number of Toilet cum Bathrooms** to the beneficiaries, as per the details given below:-

| Sl. No. | Donor Name | Village | District | Units | Handed Over Month & Date |
|---|---|---|---|---|---|
| 1 | Saint-Gobain India Private Limited | Vadakal | Kanchipuram | 12 | 09.04.2026 |
| 2 | Dynepro Private Limited | ChinnaSooriyur | Tiruchirapalli | 25 | 09.04.2026 |
| 3 | Dynepro Private Limited | Mandaiyur | Tiruchirapalli | 1 | 09.04.2026 |
| 4 | Malladi Drugs & Pharmaceuticals Ltd., | Thandalam | Ranipet | 13 | 29.04.2026 |
| 5 | Malladi Drugs & Pharmaceuticals Ltd., | Aayal | Ranipet | 8 | 29.04.2026 |
| 6 | Malladi Drugs & Pharmaceuticals Ltd., | Velithankipuram | Ranipet | 12 | 30.04.2026 |
| 7 | Saint-Gobain India Private Limited | Kandigai | Kanchipuram | 20 | 21.05.2026 |
| 8 | Saint-Gobain India Private Limited | Mathur | Kanchipuram | 18 | 21.05.2026 |
| 9 | Malladi Drugs & Pharmaceuticals Ltd., | Pudupattu | Ranipet | 13 | 01.05.2026 |
| 10 | Sundaram Dynacast Private Ltd., | Ramapuram | Ranipet | 10 | 16.05.2026 |
| 11 | Madhavasu | Ramapuram | Ranipet | 2 | 16.05.2026 |
| 12 | Real Talent Engineering Private Limited | Chellathur | Tiruvallur | 19 | 12.05.2026 |
| 13 | Malladi Drugs & Pharmaceuticals Ltd., | Madathukuppam | Tiruvallur | 10 | 06.05.2026 |
| 14 | Malladi Drugs & Pharmaceuticals Ltd., | Viswanathapuram | Tiruvallur | 9 | 06.05.2026 |
| 15 | Shri. Adi Saravanan | Mangal | Thiruvannamalai | 10 | 27.05.2026 |
| 16 | Roots Multiclean Limited | Punniyam | Tiruvallur | 10 | 17.06.2026 |
| 17 | Shri Vijayaragavan | Punniyam | Tiruvallur | 1 | 17.06.2026 |
| 18 | Smt. Indira Vijayaragavan | Punniyam | Tiruvallur | 2 | 17.06.2026 |
| 19 | Roots Multiclean Limited | Nallavanampettai | Tiruvallur | 13 | 17.06.2026 |
| 20 | Saint-Gobain India Private Limited | Pondur | Kanchipuram | 37 | 05.06.2026 |
| 21 | Roots Multiclean Limited | Azhichikudi | Cuddalore | 15 | 08.06.2026 |
| 22 | Roots Multiclean Limited | Vandurayanpattu | Cuddalore | 2 | 08.06.2026 |
| 23 | Saint-Gobain India Private Limited | Mambakkam | Kanchipuram | 10 | 05.06.2026 |
| | | | **Total** | **272** | |

# பயனாளர்களுக்கு கட்டப்பட்ட கழிப்பறையுடன் கூடிய குளியலறைகள் ஒப்படைப்பு



நமது இந்தியப் பிரதமர் **திரு. நரேந்திர மோடிஜி** அவர்களின் **'தூய்மை இந்தியா' (Swachh Bharat Mission)** திட்டத்தின் கீழ், கிராமங்களில் அதிக எண்ணிக்கையிலான பெண் உறுப்பினர்களைக் கொண்ட ஏழை மற்றும் தேவைப்படும் குடும்பங்களுக்கு, 'ஓராசிரியர் பள்ளிகள்' (Single Teacher Schools) வாயிலாக இலவசமாகத் தனிப்பட்ட கழிப்பறை மற்றும் குளியலறை வசதிகளை அமைத்துத் தரும் திட்டம் ஏப்ரல் 2015ல் தொடங்கப்பட்டது.

2026 ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான மாதங்களில், **272 கழிப்பறையுடன் கூடிய குளியலறைகள்** கட்டுமானப் பணி நிறைவடைந்து பயனாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டது.

# DEDICATION OF DESILTED PONDS

On 25.04.2026, two Ponds were desilted by STS, namely 1) Ponniamman Kovil Pond, Mettuthangal Village, Ranipet District, sponsored by TVS SCS Global Freight Solutions Limited, and 2) Annamalaiyar Koil Pond, Kattupakkam Village, Ranipet District, sponsored by Shri. Hasmukhlal D. Voraji were dedicated to the villagers.



On 23.05.2026, one desilted pond, namely, Kanniamman Kovil Pond, Pudupet village, Ranipet District, sponsored by Malladi Drugs & Pharmaceuticals Limited was dedicated to the villagers.

In the villages, large number of public participated.

# தூர் வாரப்பட்ட குளங்கள் அர்ப்பணிப்பு



25.04.2026 அன்று, STS நிறுவனத்தால் தூர்வாரப்பட்ட இரண்டு குளங்கள், அதாவது 1) ராணிப்பேட்டை மாவட்டம், மேட்டுத்தாங்கல் கிராமத்தில் அமைந்துள்ள பொன்னியம்மன் கோவில் குளம் (TVS SCS Global Freight Solutions Limited நிறுவனத்தின் நிதியுதவியுடன்), மற்றும் 2) ராணிப்பேட்டை மாவட்டம், காட்டுப்பாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள அண்ணாமலையார் கோயில் குளம் (Shri. Hasmukhlal D. Voraji அவர்களின் நிதியுதவியுடன்), கிராம மக்களின் பயன்பாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்டன.

23.05.2026 அன்று, STS நிறுவனத்தால் தூர்வாரப்பட்ட ஒரு குளம், அதாவது ராணிப்பேட்டை மாவட்டம், புதுப்பேட்டை கிராமத்தில் அமைந்துள்ள கன்னியம்மன் கோவில் குளம் (Malladi Drugs & Pharmaceuticals Limited-ன் நிறுவனத்தின் நிதியுதவியுடன்), கிராம மக்களின் பயன்பாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், கிராம பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



www.twitter.com/ststamilnadu

# CANCER AWARENESS & DETECTION CAMP



In an effort to promote public health, FREE Cancer Detection Camps have been conducted since 2017. In association with Dr. Shri. Ramananji, Leading Oncologist from Apollo Hospitals, Chennai & Doctors from Cancare Foundation and Medical Team from Anderson Labs, awareness camps are being conducted in villages every month.



On 23.05.2026 Cancer Camp was conducted at Venuthangalpuram Village, Thiruvalangadu Sanch. Dr. Kanimozhiji of Cancare Foundation briefed up about the camp. Totally 96 villagers were screened.

Similarly on 27.06.2026 Cancer Camp was conducted at Govinthangal Village, Ranipet District. Totally 137 villagers were screened.

# புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் கண்டறிதல் முகாம்கள்



பொது சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், இலவச புற்றுநோய் கண்டறிதல் முகாம்கள் 2017ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகின்றன. சென்னை அப்போலோ மருத்துவமனையின் முன்னணி புற்றுநோய் நிபுணரான டாக்டர் ஸ்ரீ. ரமணன்ஜி அவர்கள், கேன்கேர் அறக்கட்டளையின் மருத்துவர்கள் மற்றும் ஆண்டர்சன் லாப்ஸ் மருத்துவ குழுவினருடன் இணைந்து, கிராமங்களில் மாதந்தோறும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.



**23.05.2026** அன்று, திருவாலங்காடு சஞ்சிற்கு உட்பட்ட **வேணுதாங்கல்புரம்** கிராமத்தில் புற்றுநோய் பரிசோதனை முகாம் நடைபெற்றது. இம்முகாமின் நோக்கம் மற்றும் அவசியம் குறித்து **கேன்கேர் ஃபவுண்டேஷன்** நிறுவனத்தைச் சேர்ந்த **டாக்டர் கனிமொழிஜி** அவர்கள் விளக்கமளித்தார். இம்முகாமில் மொத்தம் **96 கிராமமக்கள்** புற்றுநோய் பரிசோதனை செய்து பயனடைந்தனர்.

அதேபோன்று, **27.06.2026** அன்று, **ராணிப்பேட்டை மாவட்டம் கோவிந்தாங்கல்** கிராமத்தில் புற்றுநோய் பரிசோதனை முகாம் நடைபெற்றது. இம்முகாமில் மொத்தம் **137 கிராம மக்கள்** புற்றுநோய் பரிசோதனை செய்து பயனடைந்தனர்.

# FREE EYE CHECK-UP CAMPS



SVRDS through Single Teacher Schools (STS) conducts Free Eye Check-Up Camps sponsored by Corporates to ensure the villagers where STS are functioning have their tested. Spectacles are provided and Cataract surgeries are carried out for the needed public as per the Doctors advice.

M/s. Sankara Nethralaya, Chennai visit the camps with Ophthalmologists Doctors, Technicians with required equipment for carrying out advanced testing.

140th Eye Camp was held on 23.05.2026 at Malmaduramangalam Village, Sriperumbudur-2 Sanch wherein 90 villagers were screened. Cataract surgery recommended for 13 villagers and spectacles recommended for 63 villagers.

The Eye Check-Up Camps are supported by M/s. Saint Gobain India Pvt. Ltd.

Respective Sanch Field Supervisors along with Inspection Coordinator were present during the camps.

# இலவச கண் பரிசோதனை முகாம்கள்



SVRDS, ஓராசிரியர் பள்ளிகள் (STS) மூலம், நிறுவனங்களின் ஆதரவுடன் இலவச கண் பரிசோதனை முகாம்களை நடத்தி வருகிறது. ஓராசிரியர் பள்ளிகள் (STS) செயல்பட்டு வரும் கிராமப்புற மக்களின் கண்கள் பரிசோதிக்கப்படுவதை உறுதி செய்வதே இம்முகாம்களின் நோக்கமாகும். மருத்துவர் ஆலோசனைப்படி தேவையுள்ளவர்களுக்கு கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டு, கண்புரை (Cataract) அறுவை சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

சென்னை சங்கர நேத்ராலயாவிலிருந்து கண் மருத்துவர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள் மற்றும் தேவையான நவீன பரிசோதனை உபகரணங்களுடன் முகாம்களுக்கு வருகை தந்து மேம்பட்ட கண் பரிசோதனைகளை மேற்கொள்கிறார்கள்.



23.05.2026 அன்று ஸ்ரீபெரும்புதூர்–2 சஞ்சிற்கு உட்பட்ட மால்மதுரமங்கலம் கிராமத்தில் 140வது கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது. இம்முகாமில் 90 கிராம மக்கள் கண் பரிசோதனை செய்து கொண்டனர். அவர்களில் 13 பேருக்கு கண்புரை (Cataract) அறுவை சிகிச்சை மேற்கொள்ள பரிந்துரைக்கப்பட்டது. மேலும், 63 பேருக்கு கண் கண்ணாடி (Spectacles) அணிய பரிந்துரைக்கப்பட்டது.

இலவச கண் பரிசோதனை முகாம்களுக்கு M/s. Saint Gobain India Pvt. Ltd. நிறுவனம் ஆதரவளிக்கிறது.

மேற்கண்ட முகாம்களின் போது சம்பந்தப்பட்ட சஞ்ச்களின் கள மேற்பார்வையாளர்கள் மற்றும் ஆய்வு ஒருங்கிணைப்பாளர் உடனிருந்தனர்.

# CERVICAL CANCER VACCINATION CAMP



On 10.05.2026, 24th Cervical Cancer Vaccination Camp was conducted at SVRDS Training Centre, Ulundai, sponsored by Brakes India Limited.

175 girls aged between 9 years and 29 were vaccinated.

Similarly, on 07.06.2026, 25th Cervical Cancer Camp was conducted wherein 96 girls were vaccinated.

Shri. Anil Kulkarniji, Board Member of Sankalp Beautiful World presided over the camps.

# கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் தடுப்பூசி முகாம்



10.05.2026 அன்று, **Brakes India Limited** நிறுவனத்தின் நிதியுதவியுடன், உளுந்தையில் உள்ள SVRDS பயிற்சி மையத்தில் 24வது கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டது.

9 வயது முதல் 29 வயது வரையிலான 165 சிறுமிகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

அதேபோல், 07.06.2026 அன்று 25வது கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டது. இதில் 96 பெண்குழந்தைகளுக்கு கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் தடுப்பூசி செலுத்தப்பட்டது.

Sankalp Beautiful World-ன் வாரிய உறுப்பினர் திரு. அனில் குல்கர்னிஜி முகாமுக்குத் தலைமை தாங்கினார்,



sts.ytchannel@gmail.com

# "CERVICAL CANCER VACCINATION - A MILESTONE ACHIEVEMENT"




We have implemented **Cervical Cancer Vaccination** Initiative since 2022 with an objective of protecting young girls and women from cervical cancer and promoting preventive healthcare in rural communities.

With the generous support and encouragement of our donors and well-wishers, we have so far vaccinated **2,940 unmarried girls and women between the ages of 9 and 26 years.**

We are especially happy to inform you that women and girls in the following 4 villages have now been fully vaccinated, marking a significant milestone in our mission:

- **Ranipet District - Balakrishnapuram Village** – 240 Women
- **Ranipet District - Pudupet Village** – 180 Women
- **Tiruvallur District - Mettupalayam Village** – 85 Women
- **Tiruvallur District - Velagapuram Village** – 70 Women

This achievement reflects the collective efforts of our donors, healthcare partners, volunteers, and village communities. By ensuring complete vaccination coverage in these villages, we have taken an important step towards safeguarding the health and future of thousands of young women.

We sincerely thank all our donors and supporters for their continued trust and commitment to this noble cause. Their support has enabled us to make a meaningful impact in rural healthcare, and we look forward to extending this life-saving initiative to many more villages in the coming years.

# கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் தடுப்பூசி - ஒரு மைல்கல் சாதனை

2022ம் ஆண்டு முதல், இளம் பெண்கள் மற்றும் சிறுமிகளை கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயிலிருந்து பாதுகாப்பதையும், கிராமப்புற மக்களிடையே நோய் வருமுன் தடுக்கும் சுகாதார விழிப்புணர்வை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு **கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் தடுப்பூசி திட்டத்தை** செயல்படுத்தி வருகிறோம்.




எங்கள் நன்கொடையாளர்கள் மற்றும் நலன் விரும்பிகளின் தாராளமான நிதியுதவியும், ஊக்கத்தின் காரணமாக இதுவரை **9 முதல் 26 வயது வரையிலான 2,940 திருமணமாகாத சிறுமிகள் மற்றும் இளம் பெண்களுக்கு** கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

எங்கள் பணியின் முக்கியமான மைல்கல்லாக, கீழ்க்கண்ட **4 கிராமங்களில் உள்ள அனைத்து தகுதியுடைய சிறுமிகள் மற்றும் இளம் பெண்களுக்கும்** முழுமையாக தடுப்பூசி செலுத்தி நிறைவு செய்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

- **ராணிப்பேட்டை மாவட்டம் – பாலகிருஷ்ணபுரம் கிராமம்** – 240 பெண்கள்
- **ராணிப்பேட்டை மாவட்டம் – புதுப்பேட்டை கிராமம்** – 180 பெண்கள்
- **திருவள்ளூர் மாவட்டம் – மேட்டுப்பாளையம் கிராமம்** – 85 பெண்கள்
- **திருவள்ளூர் மாவட்டம் – வேலகாபுரம் கிராமம்** – 70 பெண்கள்

இந்த மாபெரும் சாதனை எங்கள் நன்கொடையாளர்கள், மருத்துவப் பங்காளிகள், தன்னார்வலர்கள் மற்றும் கிராம மக்களின் ஒருங்கிணைந்த முயற்சியின் பலனாகும். இந்த நான்கு கிராமங்களில் முழுமையான தடுப்பூசி பாதுகாப்பை உறுதி செய்ததன் மூலம், ஆயிரக்கணக்கான இளம் பெண்களின் ஆரோக்கியத்தையும், எதிர்காலத்தையும் பாதுகாக்கும் நோக்கில் ஒரு முக்கியமான முன்னேற்றத்தை எட்டியுள்ளோம்.

இந்த உயரிய சமூகப் பணிக்கு தொடர்ந்து நம்பிக்கையுடனும் அர்ப்பணிப்புடனும் ஆதரவு வழங்கி வரும் அனைத்து நன்கொடையாளர்கள் மற்றும் நலன் விரும்பிகளுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவர்களின் மதிப்புமிக்க ஆதரவினால் கிராமப்புற சுகாதாரத் துறையில் அர்த்தமுள்ள மாற்றத்தை ஏற்படுத்த முடிந்துள்ளது. வருங்காலங்களில் இந்த உயிர்காக்கும் திட்டத்தை மேலும் பல கிராமங்களுக்கு விரிவுபடுத்தி, இன்னும் அதிகமான சிறுமிகள் மற்றும் இளம் பெண்கள் பயன்பெறச் செய்வதில் நாங்கள் உறுதியுடன் செயல்படுவோம்.

## FREE MASTER HEALTH CHECK-UP CAMPS



We are conducting Full Body Check-up Camps month on month in collaboration with Kola Saraswathi Samaj Health Centre, Purasaiwalkam, Chennai.

On 28.06.2026 such a camp was held at Athimanjeripet Village, Tiruvallur District, sponsored by **Brakes India Limited**, where 93 villagers, in total were participated and benefitted.



The main objective of this project is to create awareness about the importance of physical health among rural people and to detect and prevent diseases at an early stage. A team of doctors and health experts from Kola Saraswathi Samaj Health Centre conducted general medical examinations, blood tests, blood pressure checks, blood sugar level tests, and Body Mass Index (BMI) assessments.

## இலவச முழு உடல் பரிசோதனை முகாம்கள்



சென்னை, புரசைவாக்கத்தில் உள்ள கோலா சரஸ்வதி சமாஜ் சுகாதார மையத்துடன் இணைந்து, ஓராசிரியர் பள்ளிகள் மாதந்தோறும் முழு உடல் பரிசோதனை முகாம்களை நடத்தி வருகின்றன.

இந்த முகாம் Brakes India Limited-ன் நிதியுதவியுடன் 28.06.2026 தேதி, அத்திமாஞ்சேரிப்பேட்டை கிராமம், திருவள்ளூர் மாவட்டத்தில் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. மொத்தம் 93 கிராம மக்கள் பங்கேற்று பயனடைந்தனர்.



இந்த திட்டத்தின் நோக்கம் கிராம மக்களிடையே உடல் நலம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது மற்றும் நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து தடுப்பது ஆகும். கோலா சரஸ்வதி சமாஜ் ஹெல்த் சென்டர் மருத்துவர்கள் மற்றும் சுகாதார நிபுணர்கள் கொண்ட குழு, பொதுவான உடல் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை, இரத்த அழுத்தம், சர்க்கரை அளவு மற்றும் உடல் நிறை குறியீடு (BMI) போன்ற பரிசோதனைகளை மேற்கொண்டனர்.



Subject : **A Turning Point in Life – The Inspiring Journey of Shri V. Naveen.**

Shri V. Naveen, hailing from V. Pudur Medu Village in Tiruvallur District, has overcome tremendous hardships through determination and the right guidance. Naveen lost his father at a very young age.

Adding to the family's sorrow, his two younger sisters also passed away. Despite these tragic circumstances, his mother worked in a private company and struggled to support the family. Naveen faced setbacks in his studies and failed his Class X public examination in Tamil and Social Science.

He later joined a tutorial centre, worked hard, and successfully cleared both the subjects.

During this difficult phase, Naveen had fallen into the habit of consuming alcohol and had met with several road accidents.

Realizing that he needed a change in life, he joined the AC Mechanic course at the SVRDS – Shri. R. P. Krishnamachari Skill Training Centre. Staying at the training centre provided him with discipline, guidance and a positive environment.

He dedicated himself to learning the trade and successfully completed the course. Today, Naveen is employed as an AC Mechanic in Chennai and earns a monthly salary of Rs. 15,000. He supports his family with his income, in addition to the income of his mother financially.

Naveen's remarkable transformation stands as a shining example of how skill training, discipline, and perseverance can completely change a person's life.

His journey is truly a turning point that inspires many young people to overcome challenges and build a brighter future.

## வாழ்க்கையில் திருப்புமுனை செல்வன் வி. நவீனின் ஊக்கமூட்டும் வாழ்க்கைப் பயணம்

திருவள்ளூர் மாவட்டம், வி. புதூர் மேடு கிராமத்தைச் சேர்ந்த செல்வன் வி. நவீன், பல்வேறு துயரங்களையும் சவால்களையும் கடந்து இன்று தன்னம்பிக்கையுடன் முன்னேறிய இளைஞராக திகழ்கிறார்.

சிறுவயதிலேயே நவீன் தனது தந்தையை இழந்தார். மேலும், அவருடைய இரண்டு இளைய சகோதரிகளும் உயிரிழந்தனர். இந்த துயரமான சூழ்நிலையில், அவரது தாயார் ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து குடும்பத்தை மிகவும் கஷ்டப்பட்டு நடத்தி வந்தார்.

கல்வியிலும் நவீன் சவால்களை சந்தித்தார். பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் தமிழ் மற்றும் சமூக அறிவியல் ஆகிய இரண்டு பாடங்களில் தோல்வியடைந்தார். பின்னர் ஒரு டியூட்டோரியல் மையத்தில் சேர்ந்து விடாமுயற்சியுடன் படித்து, அந்த இரண்டு பாடங்களிலும் வெற்றி பெற்றார்.

அந்தக் காலகட்டத்தில், நவீன் மதுபானப் பழக்கத்திற்கு அடிமையாகி பலமுறை சாலை விபத்துகளிலும் சிக்கினார். தனது வாழ்க்கையை மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற உறுதியுடன், SVRDS - ஸ்ரீ ஆர். பி. கிருஷ்ணமாச்சாரி திறன் பயிற்சி மையத்தில் ஏ.சி. மெக்கானிக் பயிற்சியில் சேர்ந்தார். பயிற்சி மையத்தில் தங்கி ஒழுக்கத்துடனும் முழு ஈடுபாட்டுடனும் பயின்று, தனது பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்தார்.

தற்போது நவீன் சென்னை நகரில் ஏ.சி. மெக்கானிக்காக பணியாற்றி மாதம் ரூ.15,000 சம்பளம் பெற்று வருகிறார். தனது தாயாருடன் இணைந்து குடும்பத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கு தனது வருமானத்தை வழங்கி வருகிறார்.

செல்வன் நவீனின் இந்த வாழ்க்கைப் பயணம், திறன் பயிற்சி, ஒழுக்கம் மற்றும் விடாமுயற்சி ஒருவரின் வாழ்க்கையை எவ்வாறு முழுமையாக மாற்ற முடியும் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். அவரது வெற்றி, பல இளைஞர்களுக்கு நம்பிக்கையையும் ஊக்கத்தையும் அளிக்கும் ஒரு உண்மையான வாழ்க்கைத் திருப்புமுனையாக விளங்குகிறது.

## GREAT SUCCESS STORY



SVRDS Skill Training Centre Transforms Student's Life Mr. D. Vijay, who enrolled Refrigeration and Air Conditioning Mechanic course at the SVRDS – Sri R. P. Krishnamachariji Skill Training Centre, Ulundai, successfully completed the training conducted from 5 February 2024 to 10 May 2024.

After completion of the course, he started providing repair and maintenance services independently by visiting households. Through his dedication, hard work, and technical skills, he earned a good reputation and has now progressed to a stage where he is capable of establishing his own business.




He has now established his own business of AC Servicing Centre in Sholingur, Mottur.

We are glad that by serving as a guiding force, we are able to transform the lives of many young people like Vijay. His parents have also expressed their heartfelt thanks and great happiness regarding their son's remarkable progress.




### ஒரு மாபெரும் வெற்றிக்கதை

SVRDS திறன் பயிற்சி மையம் மாணவரின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியது

உளுந்தையில் அமைந்துள்ள SVRDS - ஸ்ரீ ஆர். பி. கிருஷ்ணமாச்சாரிஜி திறன் பயிற்சி மையத்தில் குளிர்சாதன மற்றும் காற்றோட்ட (Refrigeration and Air Conditioning Mechanic) தொழிற்பயிற்சி பாடநெறியில் சேர்ந்த திரு. டி. விஜய் அவர்கள், 05 பிப்ரவரி 2024 முதல் 10 மே 2024 வரை நடைபெற்ற பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்தார்.

பயிற்சியை முடித்த பின்னர், வீடுகளுக்குச் சென்று குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் ஏர் கண்டிஷனர்களுக்கான பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு சேவைகளை சுயமாக வழங்கத் தொடங்கினார். அவரது அர்ப்பணிப்பு, கடின உழைப்பு மற்றும் தொழில்நுட்பத் திறமையின் மூலம் நற்பெயரைப் பெற்று, தற்போது சொந்தமாக தொழில் தொடங்கும் அளவிற்கு முன்னேறியுள்ளார்.

தற்போது, சோளிங்கர் மோட்டூரில் தனது சொந்த ஏ.சி. சேவை மையத்தை (AC Servicing Centre) வெற்றிகரமாக நிறுவியுள்ளார்.

விஜய் போன்ற பல இளைஞர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த வழிகாட்டும் சக்தியாக செயல்படுவதில் எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. அவரது மகனின் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் குறித்து அவரது பெற்றோர்களும் தங்களது மனமார்ந்த நன்றியையும் பேரானந்தத்தையும் வெளிப்படுத்தினர்.

# WOMEN CAR DRIVING TRAINING



The 35th batch of Women Car Driving Training Programme with Licence, sponsored by Donors of India Development and Relief Fund, USA, was held on 06.05.2026 (25 women per batch).

Dr. Shri. R. Natarajji, IPS (Ex. President-SVRDS) and Shri. D. Rajkumar, Donor Relations have participated in the program.

Similarly 36th batch held on 11.06.2026 women car driving training program with licence was conducted. Dr. Shri. R. Natarajji (Ex. President-SVRDS) and President Dr. Shri. R. Krishnanji have participated in the programme.

We have so far trained up 900 women drivers with valid licence.

# பெண்கள் கார் ஓட்டுநர் பயிற்சி

India Development and Relief Fund, USA, (IDRF) நன்கொடையாளர்களின் ஆதரவுடன், உரிமம் (லைசென்ஸ்) உடன் வழங்கப்படும் 35வது பெண்கள் கார் ஓட்டுநர் பயிற்சி 06.05.2026 தேதி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் டாக்டர் திரு. ஆர். நடராஜ்ஜி, IPS (முன்னாள் தலைவர் - SVRDS) மற்றும் திரு. டி. ராஜ்குமார், (Donor Relations) கலந்து கொண்டனர்.

அதேபோன்று, 36வது பெண்கள் கார் ஓட்டுநர் பயிற்சி 11.06.2026 அன்று பெண்களுக்கான ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய கார் ஓட்டுநர் பயிற்சி திட்டம் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில் (SVRDS)-இன் முன்னாள் தலைவர் டாக்டர் திரு. ஆர். நடராஜ்ஜி அவர்கள் மற்றும் தலைவர் டாக்டர் திரு. ஆர். கிருஷ்ணன்ஜி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதுவரை, இத்தகைய கார் ஓட்டுநர் பயிற்சியின் மூலம் 900 பெண்களுக்கு உரிமத்துடன் கூடிய பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

# WELCOMING A NEW DONOR TO THE SVRDS FAMILY



Swami Vivekananda Rural Development Society (SVRDS) is delighted to welcome Shri. Aravind Subramaniamji, a distinguished Advocate, as a new donor to our Single Teacher Schools (STS) family.

Shri. Aravind Subramaniamji, a close friend of our Ex. President, Dr. Shri. R. Natarajji, has generously contributed Rs. 1.50 lakhs towards supporting the activities of our Single Teacher Schools. The cheque was handed over by him to SVRDS President Dr. Shri. R. Krishnanji. His thoughtful contribution will go a long way in strengthening our mission of providing value-based supplementary education to children living in remote and underprivileged villages.

We express our heartfelt gratitude to Shri. Aravind Subramaniamji for his generosity and confidence in the mission of SVRDS. His support will make a meaningful difference in the lives of many deserving children.

We also take this opportunity to convey our sincere thanks to Dr. Shri. R. Natarajji, whose goodwill and personal initiative were instrumental in introducing Shri. Aravind Subramaniamji to our organization and in facilitating this generous donation. We deeply appreciate his continued support and commitment to the cause of rural education.

On behalf of the Management, teachers, students, and beneficiaries of SVRDS, we extend our heartfelt thanks to both Shri. Aravind Subramaniamji and Dr. Shri. R. Natarajji. We look forward to their continued association and blessings in our journey of transforming rural lives through education.

# SVRDS குடும்பத்தில் புதிய நன்கொடையாளர் - அன்புடன் வரவேற்கிறோம்

சுவாமி விவேகானந்தா கிராம அபிவிருத்தி சங்கம் (SVRDS) தனது ஓராசிரியர் பள்ளிகள் (Single Teacher Schools - STS) குடும்பத்தில் புதிய நன்கொடையாளராக இணைந்துள்ள, சிறந்த வழக்கறிஞரான திரு. அரவிந்த் சுப்பிரமணியம்ஜி அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது. நமது முன்னாள் தலைவர் டாக்டர் திரு. ஆர். நடராஜ்ஜி அவர்களின் நெருங்கிய நண்பரான திரு. அரவிந்த் சுப்பிரமணியம்ஜி அவர்கள், நமது ஓராசிரியர் பள்ளிகளின் கல்விப் பணிகளுக்கு ஆதரவாக ரூ.1.50 லட்சம் நன்கொடையாக வழங்கியுள்ளார். அவர் காசோலையை SVRDS தலைவர் டாக்டர் திரு. ஆர். கிருஷ்ணன்ஜி அவர்களிடம் வழங்கினார்.

அவரது தாராளமான பங்களிப்பு, தொலைதூர மற்றும் பின்தங்கிய கிராமங்களில் வாழும் குழந்தைகளுக்கு மதிப்புகளுடன் கூடிய துணைக் கல்வியை வழங்கும் எங்கள் சேவையை மேலும் வலுப்படுத்தும். SVRDSன் சேவைப் பணியின் மீது நம்பிக்கை வைத்து, தாராள மனதுடன் நன்கொடை வழங்கிய திரு. அரவிந்த் சுப்பிரமணியம்ஜி அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவருடைய ஆதரவு பல நூறு ஏழை மற்றும் எளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் வாழ்க்கையில் நம்பிக்கையையும், முன்னேற்றத்தையும் உருவாக்கும். மேலும், திரு. அரவிந்த் சுப்பிரமணியம்ஜி அவர்களை எங்கள் அமைப்பிற்கு அறிமுகப்படுத்தி, இந்த உயரிய நன்கொடை கிடைக்க முக்கியப் பங்காற்றிய நமது முன்னாள் தலைவர் டாக்டர் திரு. ஆர். நடராஜ்ஜி அவர்களுக்கும் எங்களது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கிராமப்புறக் கல்வி வளர்ச்சிக்காக அவர் தொடர்ந்து வழங்கி வரும் அக்கறை, வழிகாட்டுதல் மற்றும் அர்ப்பணிப்பை நாங்கள் மிகவும் பாராட்டுகிறோம்.

SVRDSன் நிர்வாகக் குழு, ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பயனாளிகள் அனைவரின் சார்பாக, திரு. அரவிந்த் சுப்பிரமணியம்ஜி அவர்களுக்கும் டாக்டர் திரு. ஆர். நடராஜ்ஜி அவர்களுக்கும் எங்களது இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். கிராமப்புற குழந்தைகளின் கல்வி முன்னேற்றப் பயணத்தில் தங்களது தொடர்ந்த ஆதரவும் நல்லாசியும் என்றும் எங்களுடன் இருக்கும் என அன்புடன் எதிர்பார்க்கிறோம்.

## BANK DETAILS FOR INDIA

| | |
|---|---|
| Account in the Name of | : **Swami Vivekananda Rural Development Society** |
| Bank Name with Branch | : AXIS BANK LTD |
| Branch Address | : No.13-A, Maloni Street, T. Nagar, Chennai - 600 017. |
| Code | : 1594 |
| Account No | : SB A/c. 082010100297851 |
| IFSC Code | : UTIB0001594 |
| MICR No. | : 600211053 |




## BANK DETAILS FOR NRI



| | |
|---|---|
| Account in the Name of | : **Swami Vivekananda Rural Development Society** |
| Bank Name with Branch | : State Bank of India, New Delhi Main Branch, |
| Branch Address | : FCRA Cell, 4th Floor, 11 Sansad Marg, New Delhi - 110001. |
| Account No | : 40124775527 (FCRA Savings Account) |
| Branch Code | : 00691 |
| IFSC Code | : SBIN0000691 |
| SWIFT CODE | : SBININBB104 |
| PAN No. | : AAATS4092E |

Published by

# SINGLE TEACHER SCHOOLS

**Unit of Swami Vivekananda Rural Development Society - Established -1979**

**Registered Office :** 12(43), Ramanujam Street, T. Nagar, Chennai - 600 017. **Tel :** 91-44-2433 7640

**Admin. Office :** Flat No.1, "**NIVEDHA'S PATTU GOPALAN**", 15/4, West Road, West CIT Nagar, Nandanam, Chennai - 600 035.

**Phone :** +91-44-4350 8281 / 73388 63412 **E-mail :** admin@singleteacherschools.org

SRI RAGHAVENDRA SCREENS @ 98411 54688



**50% Tax Exemption under Section 80G of IT Act**